குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.69/2021

எ.ம.சா. 4

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10–ம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்ரமணியன் | தொழில் | |
| தந்தை பெயர் | மகாலிங்கம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.30 மணி,

Complainant Sakthivel present. Advocate Mr.Soundararajan present Complainant. Accused Jayaraman present. Advocate Mr.Thailappan present for Accused.

**முதல் விசாரணை :**

1. நான் செம்மாண்டப்பட்டி கிளை யூனியன் வங்கிக் கிளையின் மேலாளராக உள்ளேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆணவமான இவ்வழக்கு காசோலையை எந்த தேதியில் எங்களது வங்கியில் வசூலுக்காக செலுத்தப்பட்டது என்றால் 05.01.2021 ஆகும். 05.01.2021 ஆம் தேதி இவ்வழக்கு காசோலை எங்களது வங்கியில் வசூலுக்கு செலுத்தப்பட்டதற்கு வங்கியில் சீல் வைக்கப்படும். அந்த வங்கி சீல் மற்றும் காசோலையை மட்டும் பார்த்து எந்த தேதியில் காசோலை வசூலுக்கு செலுத்தப்பட்டது என்று சொல்ல முடியுமா என்றால், செம்மாண்டப்பட்டி கிளையின் சீலில் தேதி குறிப்பிடவில்லை. அதனால், காசோலையில் இருக்கும் முத்திரையையும், காசோலை திருப்புதல் மெமோவிலிருக்கும் தேதியையும் தொடர்பு படுத்தமுடியாது என்றால் சரிதான், காசோலை வங்கியில் செலுத்தப்பட்டதில் இருந்து 7 நாட்களுக்குள் ஸ்கேன் செய்யப்பட வேண்டும் என்பது விதிமுறை. அதன்படி, 05.01.2021 ஆம் தேதி வசூலுக்கு செலுத்தப்பட்ட காசோலையை எங்கள் வங்கியிலிருந்து சேலம் 5 ரோடு கிளை யூனியன் வங்கிக்கு ஸ்கேன் செய்வதற்காக அனுப்பப்பட்டு, 06.01.2021 ஆம் தேதி ஸ்கேன் செய்யப்பட்டு, 07.01.2021 ஆம் தேதி SBI வங்கிக்கு அனுப்பப்பட்டு இவ்வழக்கு காசோலை திருப்பப்பட்டுள்ளது.

2. காசோலையின் பின்புறம் இருக்கும் 07.01.2020 என்ற தேதியிட்ட முத்திரை அந்த தேதியில் வங்கியில் செலுத்தினால் தான், வைக்கப்படும் என்றால், இந்த காசோலை 07.01.2021 ஆம் தேதி திருப்பப்பட்டுள்ளது, மேற்சொன்ன CTS clearing சீல் Manual ஆக வைக்கப்படுவதால், தவறுதலாக 07.01.2020 என்று ஒரு எண் முன்பின் முரணாக தவறுதலாக வைக்கப்பட்டுள்ளது. காசோலையில் 07.01.2020 என்ற தேதி

இருக்கும்பட்சத்தில் 07.01.2021 என்ற தேதி காசோலை வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்று நான் சொல்வது யூகத்தின் அடிப்படையில் என்றால், சரியல்ல 01.04.2020 ஆம் தேதியில் கார்பரேசன் வங்கி யூனியன் வங்கியுடன் இணைக்கப்பட்டது. அதற்கான ஆதரமாக இந்திய அரசாங்கத்தின் அரசிதழில் வெளியிடப்பட்ட அரசாணையின் நகலை எடுத்து வந்துள்ளேன். **மேற்படி ஆவணம் எ.ம.சா.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 01.04.2020 ஆம் தேதிக்கு முன்பாக CTS clearing சீல் கார்பரேசன் வங்கியின் பெயரில் இருக்கும். இந்த காசோலையில் யூனியன் வங்கி முத்திரை இருப்பதால், அதன் பிறகு தான் இந்த காசோலையை ஸ்கேன் செய்திருக்க முடியும். நான் யூகத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல.

3. மேற்படி 07.01.2020 என்று தவறாக சீல் வைக்கப்பட்டதற்கு எங்களது வங்கிக் கோப்புகளில் விளக்ககடிதம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கு காசோலை இரண்டு முறை வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்றாலும், எங்களது வங்கியின் வாடிக்கையாளர் என்பதற்காக காசோலையை முதன்முறை அவரிடமே திருப்பி கொடுத்துவிட்டோம் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் சக்திவேலின் வங்கிக் கணக்கு பட்டியல் 07.01.2021 முதல் 08.01.2021 ஆம் தேதி வரையிலான பட்டியலை சமர்பிக்கிறேன். **மேற்படி ஆவணம் எ.ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.55 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.